**ஆகஸ்ட் – 01**

# TNPSC துளிகள்

- மத்திய கலாச்சாரத் துறை அமைச்சர் பிரகலாத் சிங் கலாச்சாரத் துறை அமைச்சகத்தின் மூத்தோர் / இளையோர் ஆகியோருக்கு ஆராய்ச்சிக்காக நிதியுதவி அளிக்கும் திட்டத்தில் நேபாளி மற்றும் சந்தாலி ஆகிய மொழிகள் இணைக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார்.
  - மூத்தோர் / இளையோர் ஆகியோருக்கு ஆராய்ச்சிக்காக நிதியுதவி அளிக்கும் திட்டத்தில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படும் வரை இத்திட்டத்தைச் செயல்படுத்தும் முதன்மை நிறுவனம் புது தில்லியில் உள்ள கலாச்சார வளங்கள் மற்றும் பயிற்சி மையமாகும் (Centre for Cultural Resources and Training - CCRT).
- இந்தியாவைச் சேர்ந்த ஒரு இயற்பியல் கோட்பாட்டு வல்லுநரான அதிஷ் தப்ஹோல்கர் அப்துஸ் சலாம் சர்வதேச இயற்பியல் கோட்பாட்டு மையத்தின் (International Centre for Theoretical Physics - ICTP) புதிய இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த மையம் இத்தாலியின் டிரைஸ்டியில் உள்ளது.
  - தப்ஹோல்கர் யுனெஸ்கோவின் துணை இயக்குநர் ஜெனரல் என்ற தகுதி நிலையுடன் ICTP இயக்குநராக தனது பொறுப்பை ஏற்க விருக்கின்றார்.
- எம்ஐ – 17 என்ற வானூர்தியிலிருந்துப் பறக்க உதவும் ஆடை அணிந்து குதித்த முதலாவது இந்திய விமானப் படை விமானி தருண் சௌத்ரி ஆவார். இவர் விங் கமாண்டராக உள்ளார். இவர் 8500 அடி உயரத்திலிருந்து குதித்தார்.
  - இவர் ஜூலை 21 அன்று ஜோத்பூரில் நடைபெற்ற கார்கில் திவாஸ் கொண்டாட்டங்களின் போது இதனை நிகழ்த்தினார்.
- 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 01 ஆம் தேதி முதல் சுற்றுலா நோக்கங்களுக்காக நுழைவு இசைவு கட்டணங்களிலிருந்து இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கை அரசு விலக்கு அளித்துள்ளது.
- இன்போசிஸ் நிறுவனம், தனது புகழ்பெற்ற இணையப் பாதுகாப்பு மையத்தை ரோமானியாவின் பச்சரஸ்டில் தொடங்கியுள்ளது.
  - இந்தப் பாதுகாப்பு மையம் தொடக்கம் முதல் இறுதிநிலை வரை, அனைத்து நாட்களிலும் 24 மணி நேரமும் நிகழ்நேரத்திற்கான இணையப் பாதுகாப்பு கண்காணிப்பு மற்றும் அது தொடர்பான சேவைகளை அளிக்கும்.

# தேசியச் செய்திகள்

## அடல் சமூகப் புத்தாக்க மையம்

- நிதி ஆயோக்கின் தலைமைத் திட்டமான "அடல் புத்தாக்கத் திட்டத்தின்" கீழ் அடல் சமூகப் புத்தாக்க மையங்கள் தொடங்கப்பட்டன.
- இந்த மையங்கள் சமூக நிலையில் புத்தாக்க உணர்வை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன.
- இந்தத் திட்டம் புத்தாக்க உள்கட்டமைப்பில் மிகவும் பலவீனமாக இருக்கும் 484 பின்தங்கிய மாவட்டங்களில் கவனத்தைச் செலுத்தவிருக்கின்றது.
- இந்தியாவில் உள்ள குறைவான சேவையைப் பெறும் நிலையைக் கொண்ட 1 / 2 / 3

நிலை அடுக்கு நகரங்கள், வட கிழக்கு, ஜம்மு காஷ்மீர், கிராமப்புற மற்றும் பழங்குடியினப் பகுதிகள் ஆகியவை இத்திட்டத்தின் கீழ் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

## முஸ்லீம் பெண்கள் (திருமணங்கள் மீதான உரிமைகள் பாதுகாப்பு) மசோதா, 2019

- நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் முஸ்லீம் பெண்கள் (திருமணங்கள் மீதான உரிமைகள் பாதுகாப்பு) மசோதா, 2019ஐ நிறைவேற்றியுள்ளன.
- இந்த மசோதாவை மக்களவையானது 25-07-2019 அன்றும் மாநிலங்களவையானது 30-07-2019 அன்றும் நிறைவேற்றியுள்ளது.
- இந்த மசோதாவானது திருமணமான முஸ்லீம் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் தங்களுடைய கணவர்கள் உடனடியாக மூன்று முறை தலாக் கூறி விவகாரத்து செய்யும் நடைமுறையைத் தடுப்பதற்கும் உதவும்.
- இது எழுத்து வடிவிலோ அல்லது மின்னணு வடிவிலோ உள்ளிட்ட அனைத்து வடிவிலான மூன்று முறை தலாக் கூறி விவாகரத்து செய்யும் நடைமுறையைச் செல்லாது என்றும் அது சட்ட விரோதம் என்றும் அறிவித்துள்ளது.
- இந்த மசோதா இந்த நடைமுறையை மூன்று ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை மற்றும் அபராதம் ஆகியவற்றுடன் தண்டிக்கப்பட வேண்டிய குற்றமாக அறிவித்துள்ளது.
- இதற்காக விதிக்கப்படும் அபராதத் தொகையானது வழக்கை விசாரணை செய்யும் நீதிபதியின் தனிப்பட்ட முடிவாகும்.
- இது திருமணமான முஸ்லீம் பெண்களுக்கான வாழ்வாதார உதவித் தொகை வழங்கீடு மற்றும் பெற்றோரைச் சார்ந்துள்ள குழந்தைகளுக்கான நிதியுதவி ஆகியவை நீதிபதியினால் முடிவெடுக்க வழிவகை செய்கின்றது.
- திருமணம் செய்வதிலிருந்துப் பருவம் அடையாத குழந்தைகளைப் பாதுகாக்க மனைவிக்கு உரிமை உண்டு என்று இந்த மசோதா கூறுகின்றது.
- இது பிணையில் (ஜாமீன்) வெளியே வரமுடியாத ஒரு குற்றமாகும். இருந்தாலும், விசாரணை செய்யும் நீதிபதி குற்றம் சாட்டப்பட்டவருக்குப் பிணை அளிப்பதற்கான ஒரு விதிமுறை இந்த மசோதாவில் உள்ளது.

## கூடுதல் பொறுப்பு – தேசியப் பாதுகாப்புப் படை

- இந்தோ - திபெத்திய எல்லைப் பாதுகாப்புப் படையின் பொது இயக்குநரான S.S. தேஸ்வால் என்பவருக்கு தீவிரவாத எதிர்ப்புப் படையான தேசிய பாதுகாப்புப் படையின் (National Security Guard - NSG) இயக்குநர் என்ற கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.
- இவர் 2019 ஆம் ஆண்டு ஜூலை 31 ஆம் தேதி ஓய்வு பெற்ற NSGயின் பொது இயக்குநரான சுதீப் லக்டாக்கியா என்பவரிடமிருந்து இந்த பொறுப்பைப் பெற்றார்.
- NSGயின் பொது இயக்குநர் என்ற பதவியானது இந்தியக் காவல் பணி அதிகாரியினால் நிரப்பப் படுகின்றது. SS தேஸ்வால் என்பவர் தெலுங்கானா பணிப் பிரிவிவைச் சேர்ந்த 1984 ஆம் ஆண்டு இந்தியக் காவல் பணி அதிகாரியாவார்.

***இதுபற்றி***

- NSG ஆனது உள்நாட்டுப் பிரச்சினைகள் மற்றும் தீவிரவாதம் ஆகியவற்றிலிருந்து

மாநிலங்களைப் பாதுகாப்பதற்காக 1984 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

- இது மத்திய உள்துறை அமைச்சகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றது.
- இது தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை அதன் அனைத்து வடிவங்களிலும் கையாளுகின்றது.

## தேசிய பால் பவன்


- மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் ரமேஷ் பொக்ரியால் புது தில்லியில் உள்ள தேசிய பால் பவனில் விமான மாதிரியுடன் ஒரு சிறப்பு இந்திய விமானப் படை (IAF - Indian Air Force) மையத்தைத் திறந்து வைத்தார்.
- இது IAF-ல் பணியாற்ற சிறு குழந்தைகளை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேலும் இந்திய விமானப் படையின் தலைமைத் தளபதியான BS தனோவா விமானப் படையின் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு “இந்திய விமானப் படை : ஒரு முத்திரை” என்ற ஒரு புதிய முப்பரிமாண கைபேசியில் இயங்கக் கூடிய காணொலி விளையாட்டைத் தொடங்கி வைத்தார்.

### *இதுபற்றி*

- தேசிய பால் பவன் என்பது மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தினால் முழுவதும் நிதியளிக்கப் படக்கூடிய ஒரு தன்னாட்சி அமைப்பாகும்.
- இது குழந்தைகளுக்கு உகந்த சூழலில் பல்வேறு நடவடிக்கைகள் மற்றும் விளையாட்டுகளின் மூலம் குழந்தைகளின் சிந்திக்கும் திறனை மேம்படுத்துவதற்காக 1956 ஆம் ஆண்டில் அப்போதையப் பிரதமரான ஜவஹர்லால் நேருவினால் ஒரு தேசிய அளவிலான திட்டமாக ஏற்படுத்தப்பட்டது.

## R – 27 வானிலிருந்து வான் இலக்கைத் தாக்கி அழிக்கும் ஏவுகணை – இரஷ்யா

- இரஷ்யாவிடமிருந்து R-27 என்ற வானிலிருந்து வான் இலக்கைத் தாக்கி அழிக்கக் கூடிய ஒரு ஏவுகணையைப் பெறுவதற்கு ஒப்பந்தம் ஒன்றில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது.




- இந்த ஏவுகணையானது இந்திய விமானப்படையின் போர் விமானமான Su-30 MKI என்ற விமானத்தில் பொருத்தப் படவிருக்கின்றது. இது மிக அதிக தூரத்தில் நடைபெறும் போரின் போது அதன் திறன்களை அதிகரிக்கும்.
- இது 10 – I என்ற திட்டத்தின் கீழ் பெறப் படவிருக்கின்றது. 10 – I என்ற திட்டமானது அனைத்து 3 ஆயுதப் படைகளும் போர்க் கழிவுக் காப்பகத்தை (WWR - War Wastage Reserve) பராமரிப்பதைக் கட்டாயமாக்குகின்றது.
- WWR என்பது ஒரு குறிப்பிட்ட குறைந்தபட்ச காலகட்டத்திற்கு முக்கியமான ஆயுத அமைப்புகள் மற்றும் உதிரிப் பொருட்களின் பராமரிப்பைக் குறிக்கும்.

### இஸ்ரோ தொழில்நுட்பத் தொடர்பு அலகு – மாஸ்கோ

- இரஷ்யாவின் மாஸ்கோவில் இஸ்ரோ தொழில்நுட்பத் தொடர்பு அலகு (ISRO Technical Liaison Unit - ITLU) ஒன்றை அமைப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இது பரஸ்பர ஒருங்கிணைந்த முடிவுகளுக்காக இரஷ்யா மற்றும் அதன் அண்டை நாடுகளிலுள்ள தொழிற்சாலைகள் மற்றும் விண்வெளி நிறுவனங்களுடன் இணையவிருக்கின்றது.
- ITLU ஆனது விண்வெளித் தொழில்நுட்பத்தில் ஒத்துழைப்புக்கான தற்போதைய "இருதரப்புத் திட்டங்களை" ஆதரிக்கும்.
- இது இஸ்ரோவின் சார்பாக முழுமையாக செயல்படவிருக்கின்றது.

## சர்வதேசச் செய்திகள்

### சாவாலா தேஜா சிங் ஆலயம் – பாகிஸ்தான்

- ஏறத்தாழ 1000 ஆண்டு பழமையான பாகிஸ்தானின் சியால்கோட் நகரில் உள்ள சாவாலா தேஜா சிங் ஆலயம் பிரிவினைக்குப் பின்பு முதன்முறையாக பக்தர்களுக்காக மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.



- இது பிரிவினைக்குப் பின்பு கடந்த 72 ஆண்டுகளாக பூட்டப் பட்டிருந்தது.
- இக்கோவில் சர்தார் தேஜா சிங் என்பவரால் கட்டப்பட்டது. இக்கோவில் சிவன் கடவுளுக்காக அர்ப்பணிக்கப் பட்டுள்ளது.

## பொருளாதாரச் செய்திகள்

### எளிதான முறையில் அயல்நாட்டிலிருந்துப் பெறப்படும் வணிக ரீதியிலான கடன்

- இந்திய ரிசர்வ் வங்கியானது பணப் புழக்கத்தை எளிமைப்படுத்தும் நோக்கத்திற்காக பெருநிறுவனங்கள், வங்கி சாரா கடன் வழங்கும் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கான அயல்நாட்டிலிருந்து பெறப்படும் வணிக ரீதியிலான கடன் விதிகளை (External Commercial Borrowing - ECB) எளிதாக்கியுள்ளது.

- இது ECBற்கான "இறுதிப் பயனாளர்" (End-use) விதிமுறைகளை தளர்த்தியுள்ளது.
- ECB என்பது இந்திய நிறுவனங்கள், இந்திய நாட்டிற்கு வெளியே வெளிநாட்டுப் பணத்தில் கடன் பெறுவதற்கு வழிசெய்ய இந்தியாவில் பயன்படுத்தப்படும் ஒரு கூறாகும்.

### நிறுவனங்கள் (திருத்த) மசோதா, 2019

- இந்தியப் பாராளுமன்றம் நிறுவனங்கள் (திருத்த) மசோதா, 2019 ஐ நிறைவேற்றியுள்ளது.
- இது 2013 ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டத்தைத் திருத்துகின்றது.
- இது பின்வருவனவற்றை நோக்கங்களாகக் கொண்டுள்ளது.
    - பெருநிறுவன சமூகப் பொறுப்புடைமை விதிமுறைகளை கடினப் படுத்துதல்
    - நிறுவனத்தின் சட்ட விதிகளை பின்பற்றாததற்காக கடுமையான நடவடிக்கையை உறுதி செய்தல்.
    - சிறந்த பொறுப்புடைமை மற்றும் பெருநிறுவன நல்லாட்சி விதிமுறைகளின் சிறந்த அமலாக்கத்தை உறுதி செய்தல்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### TOI 270 கோள் அமைப்பு – TESS

- வெளிக் கோளினை ஆய்வு செய்வதற்காக அனுப்பப்பட்ட நாசாவின் செயற்கைக் கோளானது (Transiting Exoplanet Survey Satellite - TESS) ஒரு வெளிக் கோளையும் TOI 270 என்ற பெயர் கொண்ட கோள் அமைப்பையும் கண்டுபிடித்துள்ளது.
- TOI 270 ஆனது பூமியிலிருந்து 73 ஒளி ஆண்டுகளுக்கு அப்பால் உள்ளது.
- TOI 270 ஆனது ஒரு நட்சத்திரமாகும். TOI 270b, TOI 270c மற்றும் TOI 270d ஆகிய மூன்று வெளிக்கோள்கள் இதனைச் சுற்றி வருகின்றன.
- வெளிக் கோள்கள் என்பது சூரியக் குடும்பத்திற்கு வெளியில் உள்ள கோள்களாகும். \

## மாநிலச் செய்திகள்

### AMBIS உடல் அங்க (பயோமெட்ரிக்) குற்றவாளிகள் கண்காணிப்பு அமைப்பு – மும்பை

- கைது செய்யப்பட்ட குற்றவாளிகளுக்கான ஒரு மேம்படுத்தப்பட்ட கண்காணிப்பு அமைப்பானது மும்பையில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.
- "AMBIS" (Automated Multimodal Biometric Identification System) ஆனது "தானியங்குப் பல்முனை உடல் அங்க அடையாள அமைப்பு" என்ற பெயர் கொண்டது. இந்தியாவில் உள்ள காவல் துறையினால் பயன்படுத்தப்படும் இதே வகையைச் சேர்ந்த முதலாவது அமைப்பு இதுவாகும்.
- AMBIS ஆனது மைய வழங்ககத்துடன் (Server) இணைக்கப்பட்டுள்ளது. இது அனைத்து குற்றவாளிகளின் புகைப்படங்கள், கைரேகைகள் மற்றும் கருவிழி ஆகியவற்றைச் சேமித்து வைக்கின்றது.

- இது கணிப்பொறியின் சுட்டியை அழுத்தியவுடன் குற்றவாளிகளை அடையாளம் காண உதவுகின்றது. இது உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் குற்றவாளிகள் இருந்தாலும், அது குறித்தத் தகவலை காவல் துறையின் மற்ற பிரிவுகளுக்கு வழங்குகின்றது.

# இதரச் செய்திகள்

## சுற்றுலா நேரம் – 9 மணி வரை

- இந்தியா முழுவதும் மத்திய அரசினால் பாதுகாக்கப்பட்டுள்ள 10 நினைவுச் சின்னங்கள் காலை சூரிய உதயத்திலிருந்து இரவு 9 மணி வரை பொது மக்களின் பார்வைக்காகத் திறந்திருக்கும் என்று மத்திய கலாச்சார மற்றும் சுற்றுலாத் துறை இணை அமைச்சர் (தனிப் பொறுப்பு) பிரகலாத் பட்டேல் அறிவித்துள்ளார்.
- பொது மக்களுக்காக பெரும்பாலான நினைவுச் சின்னங்களின் நுழைவு வாயில்கள் 5.30 – 6.00 மணிக்குள் மூடப்பட்டு விடுகின்றன.
- இந்த நினைவுச் சின்னங்களின் பட்டியல் பின்வருமாறு:

| | |
|---|---|
| டெல்லியில் உள்ள உமாயூன் சமாதி | புவனேஷ்வரில் உள்ள ராஜாராணி ஆலயம் |
| டெல்லியில் உள்ள சப்தர்ஜங் சமாதி | கஜுராஹோவில் உள்ள துல்ஹாதேவ் ஆலயம் |
| குருஷேத்திராவில் உள்ள ஷேக் சிலி சமாதி | மகாராஷ்டிராவில் உள்ள ஆலயக் குழுக்கள் (மார்க்கந்தா) |
| உத்தரப் பிரதேசத்தில் உள்ள மன் மஹால் (வாரணாசி) | குஜராத்தின் பாட்டனில் உள்ள ராணி கீ வாவ் |
| கர்நாடகாவில் உள்ள கோல் கும்பாஸ் | கர்நாடகாவில் பட்டாடக்கல்லில் உள்ள நினைவுச் சின்னங்கள் |

- - - - - - - - - - - - - - -